நேபாளத்தில் பெரும் வெள்ளம்

திருச்சியைச் சேர்ந்த 3 பெண்கள் மீட்பு; 2 பேர் மாயம்

திருச்சி, ஆக. 27: நேபாள பெரு வெள்ளத்தில்சிக்கியதிருச்சிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களில் மூன்று பெண்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலும், இரு பெண்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேபாளத்தில் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள திருச்சியை சேர்ந்த சிவரஞ்சனி, கற்பகம், வள்ளிநாயகி. தேடப்பட்டு வரும் ஸ்ரீரங்கம் விமலா. (வலது ஓரம்)

கும்பகோணத்தில் உள்ள தனியார் டிராவல்ஸ் ஏஜென்ஸி மூலம் மானசரோவருக்கு யாத்திரை சென்று, நேபாள பெருவெள்ளத்தில் சிக்கிய திருச்சி உறையூரைச் சேர்ந்த எம். சிவரஞ்சனி (46), கே.கே. நகரைச் சேர்ந்த ஆர். கற்பகம் (62), தில்லை நகரைச் சேர்ந்த வள்ளிநாயகி (63) ஆகியோர் பத்திரமாக மீட்கப்பட்டு, நேபாளம் திரிசூலியில் உள்ள ராணுவ முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மூவரும் ஒன்றாக நின்று தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக, உறவினர்களுக்கு புகைப்படங்களை கைப்பேசி வாயிலாக பகிர்ந்துள்ளனர்.

தங்களை நேபாளத்திலிருந்து மீட்டு தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உறவினர்களுக்கும், தமிழக அரசுக்கும் அந்த மூவரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதேபோல, மூவரின் உறவினர்களும் திருச்சி மாவட்ட நிர்வாகத்துக்கும், தமிழக அரசுக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2 பேர் நிலை என்ன?: கும்பகோணத்தில் உள்ள நிறுவனத்தின் மூலம் சென்றவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், சென்னை குரோம்பேட்டையில் உள்ள தனியார் நிறுவனத்தின் மூலம் சுற்றுலா சென்றவர்களில் இடம்பெற்ற திருச்சி ஸ்ரீரங்கம்,ராகவேந்திரபுரம், சரஸ்வதி கார்டன் பகுதியைச் சேர்ந்த விமலா (52), திருவெறும்பூர் வட்டம், காட்டூர், விக்னேஷ் நகரைச் சேர்ந்த ஜி. கனகசுந்தரம்பாள் (63) ஆகியோரின் நிலை என்ன என்பது தெரியவில்லை.

இதுகுறித்து ஸ்ரீரங்கம் விமலாவின் உறவினர்கள் கூறுகையில், இதுவரையிலும் விமலாவை தொடர்பு கொள்ள முடியவில்லை.

அவர் குறித்து எந்தத் தகவலும் தெரியவில்லை. மத்திய, மாநில அரசுகள் உதவிட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதேபோல, கனகசுந்தரம்பாளின் மகள் வெளிநாட்டில் வசிக்கிறார். நேபாளத்தில் வெள்ளம் குறித்த தகவல் அறிந்து, அவரை தொடர்பு கொள்ள முயன்றுள்ளார். கைப்பேசி இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இதனால், அவரது உறவினர்களும் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

தாயகம் அழைத்துவர நடவடிக்கை: இதுதொடர்பாக, திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரத்திக் தாயள் கூறுகையில், பத்திரமாக மீட்கப்பட்டுள்ள மூவரையும் திருச்சி அழைத்து வர தமிழக அரசு மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள நிறுவனம் மூலம் சுற்றுலா சென்றவர்களில் 2 பேர் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். அவர்களை தேடும் பணியில் மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

இதுதொடர்பாக,திருச்சிமாவட்டத்தில் உள்ளவர்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவையிருப்பின், 1800-309-3793, 928951671, 8069009901 என்ற உதவி எண்களை தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

மின்வாரிய அலுவலகங்களில் சோதனை கணக்கில் வராத ரூ.1.07 லட்சம் பறிமுதல்

திருச்சி, ஆக. 27: திருச்சியில் மின்வாரிய அலுவலகங்களில் வியாழக்கிழமை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீஸார் மேற்கொண்ட சோதனையில், 12 அலுவலர்களிடமிருந்து கணக்கில் வராத ரூ.1.07 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

திருச்சி தென்னூரில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை பொறியாளர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் உதவி மின்பொறியாளர் அலுவலகங்களில் ஊழல் தடுப்புப் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மணிகண்டன் தலைமையிலான போலீஸார் வியாழக்கிழமை பிற்பகலில் திடீர் சோதனை மேற்கொண்டனர். இதில், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் முதல் போர்மேன் வரையில் 12 பேரிடமிருந்து கணக்கில் வராத ரூ.1.07 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், சிந்தாமணி பிரிவு அலுவலக உதவி பொறியாளர் கமல் என்பவர் ஜி-பேயில் ரூ. 9.14 லட்சமும், பாலக்கரை பிரிவு உதவி நிர்வாகப் பொறியாளர் பிரபாகரன் என்பவர் ஜி-பே மூலம் ரூ.4.44 லட்சமும் என மொத்தம் ரூ.13.58 லட்சமும் பெற்றிருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் தொடர்ந்து விசாரிக்கின்றனர்.

பணம் பறிமுதல் செய்யப்பட்ட 12 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்படும் என்று போலீஸார் தெரிவித்தனர்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

பிராந்திய அலுவலகம், திருச்சி : எண்.4, பாரதிதாசன் சாலை, கன்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி - 620 001. போன் : 0431-2460355, மின்னஞ்சல் : trichyinsp@iob.bank.in

பெட்டகங்களை உடைத்துத் திறப்பது குறித்த பொது அறிவிப்பு

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கீழ் குறிப்பிட்ட கிளையில் பாதுகாப்புப் பெட்டக வசதி பெற்று கீழ்குறிப்பிட்டவர்கள் உபயோகித்து வருகிறார்கள் என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இவ்வறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. வங்கி கிளையானது தனிப்பட்ட கடிதம் / ஒப்புகையுடன் கூடிய பதிவஞ்சல் மூலம் பெட்டக வாடகைதாரர்களுக்கு, வங்கியின் பதிவுகளின் படி உள்ள முகவரிக்கு பெட்டக வாடகை நிலுவையைச் செலுத்தி, பெட்டக வாடகை ஒப்பந்தத்தை நடைமுறையில் வைத்திருக்கவும் கோரி வேண்டுகோள் அனுப்பப்பட்டது. எங்கள் கடிதங்களுக்குப் பின்னரும் வாடகைதாரர்கள் தங்கள் பெட்டக வாடகை நிலுவைகளைச் செலுத்தவில்லை. எனவே தயவுசெய்து இந்த அறிவிப்பினை இறுதி அறிவிப்பாகக் கருதி பெட்டக வாடகையினை உடனடியாகச் செலுத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். கீழே குறிப்பிட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள பெயர்களுக்கு எதிராக உள்ள வாடகைதாரர்கள் தங்கள் வாடகை தொகை முழுவதையும் **இந்த அறிவிப்பு கண்ட 15 நாட்களுக்குள் தொகையைச் செலுத்தி விடவும்.** தவறினால் வங்கி தங்களது பெட்டக வாடகை ஒப்பந்தத்தை திரும்பப் பெறுவதாக பரிசீலனை செய்து மேற்கொண்டு வாடகைதாரருக்கு எந்த ஒரு அறிவிப்பும் செய்யாது அவர்களது சொந்தச் செலவு மற்றும் இடர்பாடுகளுடன் பெட்டக வாடகைக்கு விடுதல் தொடர்பான விதிகளின் படி எங்களுக்கு எந்தவித பொறுப்பும் இல்லாத நிலையில் பெட்டகத்தினை உடைத்துத் திறக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. வங்கிக்கு வாடகை நிலுவையுடன், கட்டணங்கள், பிற செலவினங்களை வசூலிக்க சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க உரிமை உள்ளது. பெட்டகத்தின் உள்ளடங்கிய பொருட்கள் ஏதேனுமிருப்பின் அவற்றை தொடர்புடைய வாடகை நிலுவைகள், பெட்டகங்களை உடைத்துத் திறக்க ஆகும் செலவு மற்றும் கையாளும் செலவினங்கள் முழுமையும் செலுத்தப்பட்ட பின்னரே விடுவிக்க இயலும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	லாக்கர் எண்	பெட்டக வாடகை நிலுவை மற்றும் தாமத கட்டணம்	வாடகைதாரர்கள் பெயர் மற்றும் முகவரி
திருச்சிராப்பள்ளி–கன்டோன்மென்ட் கிளை (0093) : 215, மதுரை ரோடு, திருச்சி–கன்டோன்மென்ட் கிளை, திருச்சிராப்பள்ளி – 620 001, தமிழ்நாடு, போன் : 89259 50093			
1	2020096	ரூ.24,391/– + GST & பிற கட்டணங்கள்	**திரு.குகன்.S,** எண்.47, பாளையம் பஜார், உறையூர், திருச்சி – 620 003.
2	2020124	ரூ.9,400/– + GST & பிற கட்டணங்கள்	**திருமதி.மீனா குமாரி,** எண்.T–34, 5வது வீதி, ஞானம் காலனி, திருச்சி – 620 003.
3	2020138	ரூ.41,246/– + GST & பிற கட்டணங்கள்	**திரு.T.குகன்,** எண்.4/63, அரியமங்கலம், சீரத்தோப், திருச்சி – 620 102. **திருமதி.G.ஜின்னி,** எண்.4/63, அரியமங்கலம், சீரத்தோப், திருச்சி – 620 102.
4	2050049	ரூ.16,776/– + GST & பிற கட்டணங்கள்	**திரு.எட்வின் கிறிஸ்டி,** எண்.54, அஹமது காலனி, 2வது மெயின் ரோடு, ராமலிங்கம் நகர், திருச்சி – 620 003. **திரு.SMR ஆம்புரோஸ்,** எண்.54, அஹமது காலனி, 2வது மெயின் ரோடு, ராமலிங்கம் நகர், திருச்சி – 620 003.
K.சாத்தனூர்–திருச்சி கிளை (0375) : மனை எண்.452, 94, ராஜாராம் சாலை, K.சாத்தனூர், K.K.நகர் அஞ்சல், திருச்சிராப்பள்ளி – 620 021, தமிழ்நாடு, போன் : 89259 50375			
1	010030	ரூ.17,881/– + GST & பிற கட்டணங்கள்	**திரு.T.ராஜசேகர்,** எண்.1, பாண்டியன் வீதி, ராஜிதாபுரம் வீதி, K.K.நகர், திருச்சி – 620 021.
2	010046	ரூ.13,500/– + GST & பிற கட்டணங்கள்	**திருமதி.மேரி சரோஜினி,** எண்.579, சாதிக் பாட்சா வீதி, K.K.நகர், திருச்சி – 620 021.
3	040252	ரூ.12,700/– + GST & பிற கட்டணங்கள்	**திரு.ராமலிங்கம் தமிழ்செல்வன்,** எண்.167, EVR நகர், திருவானைக்கோவில், திருச்சி – 620 005.
4	050262	ரூ.16,500/– + GST & பிற கட்டணங்கள்	**செல்வி.D.ஷாஹானாஸ் பேகம்,** எண்.C–21, ராஜ வீதி, குறிஞ்சி நகர், K.K.நகர், திருச்சி – 620 021.
5	070378	ரூ.16,500/– + GST & பிற கட்டணங்கள்	**திரு.N.விஸ்வநாதன்,** எண்.2, 9வது குறுக்கு, குமரன் நகர், திருச்சி – 620 017.
6	070391	ரூ.27,131/– + GST & பிற கட்டணங்கள்	**திரு.S.R.சங்கர்,** கதவு எண்.3, அஞ்சுகம் நகர், K.K.நகர், திருச்சி – 620 021.
7	090460	ரூ.9,400/– + GST & பிற கட்டணங்கள்	**திருமதி.ராணி மகேஸ்வரி,** எண்.12, வீனஸ் நகர், ஏர்போர்ட், திருச்சி – 620 021. **செல்வி.பாரி,** எண்.12, வீனஸ் நகர், ஏர்போர்ட், திருச்சி – 620 021.
8	090467	ரூ.9,400/– + GST & பிற கட்டணங்கள்	**செல்வி.S.விஜயா,** எண்.7/35, 7வது குறுக்கு, சுந்தர் நகர், திருச்சி – 620 021.
9	100594	ரூ.13,679/– + GST & பிற கட்டணங்கள்	**செல்வி.ஆனந்தி.P,** எண்.19, பெரியார் வீதி, அம்பப்பா நகர், திருச்சி – 620 021.
10	110641	ரூ.11,600– + GST & பிற கட்டணங்கள்	**திரு.S.சிவகுமரவேல்,** எண்.20, கணபதி வீதி, அம்பப்பா நர், திருச்சி – 620 021.
அம்பிகாபுரம்–திருச்சி கிளை (1077) : மனை எண்.8 & 9, K K மெயின் ரோடு, AVK நகர், அம்பிகாபுரம் கிளை, திருச்சிராப்பள்ளி – 620 004, தமிழ்நாடு, போன் : 89259 51077			
1	020007	ரூ.13,679/– + GST & பிற கட்டணங்கள்	**திரு.V.சிவபெருமாள்,** எண்.1320, காமராஜ் நகர், திருச்சி – 620 010.

மேலும் விவரங்களுக்கு : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை மேலாளரை அணுகவும்.

தேதி : 27.08.2026
இடம் : திருச்சி

அங்கீகரிப்பட்ட அலுவலர்,
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

நகைப் பட்டறையில் சிலிண்டர் வெடித்து தீவிபத்து

மணப்பாறை, ஆக. 27: மணப்பாறையை அடுத்த பன்னாங்கொம்பில் நகைப் பட்டறையில் வியாழக்கிழமை எரிவாயு உருளை (சிலிண்டர்) வெடித்து தீவிபத்து ஏற்பட்டது.

பன்னாங்கொம்பு வெள்ளையம் மாபட்டி சாலை பகுதியில் வசித்து வருபவர் ராமர் மகன் வித்யாசங்கர் (24). இவர் அதே பகுதியில் சில மாதங்களுக்கு முன் நகைப்பட்டறை தொடங்கி சிறிய அளவில் நகைகளை செய்து வந்தார்.

இந்நிலையில், வியாழக்கிழமை பிற்பகல் பட்டறையில் வித்யாசங்கர் தனியாக வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது, பட்டறையில் இருந்த எரிவாயு உருளையில் திடீரென தீப்பற்றியுள்ளது. இதனால், வித்யாசங்கர் அங்கிருந்து வெளியே வந்துவிட்டார். அப்போது எரிவாயு உருளை வெடித்தது.

தகவலின்பேரில் நிகழ்விடத்துக்கு சென்ற மணப்பாறை தீயணைப்புத்துறை வீரர்கள் தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீவிபத்தில் பட்டறையிலிருந்த சுமார் ரூ. 2.50 லட்சம் மதிப்பிலான ஹைட்ராலிக் இயந்திரம், சுமார் ரூ. 1 லட்சம் மதிப்பிலான பாலீஷ் செய்யும் இயந்திரம், ரூ. 1.50 லட்சம் மதிப்பிலான நகைகளை உருக்க பயன்படுத்தப்படும் கருவிகள் மட்டுமின்றி, வேலைக்காக வாங்கி வைத்திருந்த சுமார் 50 கிராம் தங்கம், சில கிராம் வெள்ளி ஆகியவை தீயில் கருகியதாக கூறப்படுகிறது. தீ விபத்து குறித்து புத்தாநத்தம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

பாரதிய வித்யாபவன் திருச்சி கேந்திரம் மற்றும் ஸ்ரீ ராகவேந்திர சுவாமி மடம் இணைந்து நடத்தும் ஸ்ரீராகவேந்திர ஆராதனை மஹோத்சவம்: குரலிசை நிகழ்ச்சி, ஸ்ரீ ராகவேந்திரசுவாமி மடம், ஸ்ரீரங்கம், மாலை 6.

குடல்நோய் – தீர்வுகள் கருத்தரங்கம்: மருத்துவர் சுவாமிநாதன் பங்கேற்பு, திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கம், மேலரண் சாலை, மாலை 6.30.

விளம்பர நிறுவனங்களுக்காக சாலை மையத் தடுப்புகள் உடைப்பு

திருச்சி, ஆக. 27: விளம்பர நிறுவனங்களுக்கு சாதகமாக சாலையின் புதிய மையத் தடுப்புகளை உடைப்பதற்கு எதிர்ப்பு வலுத்ததைத் தொடர்ந்து, பணிகளை நிறுத்தி மேயர் உத்தரவிட்டுள்ளார்.

பணிகளை நிறுத்த மேயர் உத்தரவு

திருச்சி– கரூர் புறவழிச் சாலையில் உடைக்கப்பட்டுள்ள மைய தடுப்பு சுவர்.

திருச்சி மாநகராட்சிக்குள்பட்ட 25 சாலைகளில் மையத் தடுப்புகளை அகற்றிவிட்டு, புதிதாக மையத் தடுப்புகளை அமைத்து அழகுபடுத்த மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டிருந்தது.

இந்தச் சாலைகளில் இருவழி வாகனப் போக்குவரத்தைச் சீரமைக்கவும், வெப்ப அழுத்தம், காற்று மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் பசுமையை வளர்க்கவும் உள்ளதாகக் கூறி, திருச்சி–கரூர் புறவழிச் சாலை, டிவிஎஸ் டோல்கேட் - மாநகர காவல் ஆணையர் அலுவலகம் வரை, இ.பி. சாலை, பாரதிதாசன் சாலை, ராக்கின்ஸ் சாலை, மேஜர் சரவணன் சாலை, அண்ணா நகர் இணைப்பு சாலை, மரக்கடை, புதுக்கோட்டை சாலை, தில்லை நகர் 80 அடி சாலை, இவிஆர் சாலை, ராயல் சாலை ஆகிய 12 சாலைகளில் 9 கி.மீ. தொலைவுக்கு பணிகள் தொடங்கப்பட்டன. இதில், முதல்முதலாக திருச்சி–கரூர் புறவழிச்சாலையில் உள்ள மையத் தடுப்பு உடைக்கப்பட்டது.

கி.மீ.க்கு ரூ. 50 லட்சத்தில் பணிகள்: இத்திட்டத்தின் கீழ், ஏற்கெனவே உள்ள சாலை மையத் தடுப்புகளை முற்றிலும் அகற்றிவிட்டு, இருபுறமும் கான்கிரீட் போட்டு, நடுவில் மண் வைத்து, அதில் பூச்செடிகளை வைப்பது, இடைப்பட்ட இடத்தில் விளம்பரப் பதாகைகளை வைத்துக் கொள்வது என கி.மீ. ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் மையத் தடுப்புகளை அமைப்பது என முடிவு செய்யப்பட்டது.

கடும் எதிர்ப்பு: தனியாருக்கு சாதகமாக, புதிதாகக் கட்டப்பட்ட சாலை மையத் தடுப்புகள் அகற்றப்படுவதாக சமூக ஆர்வலர்களும், சாலை பயனீட்டாளர்களும் புகார் தெரிவித்த நிலையில், அகலப்படுத்தப்படும் சாலை மையத் தடுப்புகளால் சாலையின் அகலம் குறைந்து போக்குவரத்து நெரிசல் ஏற்படும் எனக் கூறி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்து மனு அளித்தனர்.

இதுகுறித்து சாலை பயனீட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் கூறியதாவது: திருச்சி மாநகரில் உள்ள முக்கியச் சாலைகளின் மையத் தடுப்புகள் அனைத்தும் கடந்த 3 முதல் 5 ஆண்டுகளுக்கு முன்புதான் அமைக்கப்பட்டன. அண்மையில் முதல்வர் திருச்சிக்கு வந்தபோது, மையத் தடுப்புகள் சுண்ணாம்பு அடிக்கப்பட்டு, அழகாகவே பராமரிக்கப்பட்டன. தற்போது எதற்காக இந்த மையத் தடுப்புகளை இடித்துவிட்டு, மீண்டும் அழகுபடுத்த வேண்டும்?. ஏற்கெனவே, சில மையத் தடுப்புகளில் வைக்கப்பட்ட பூச்செடிகள் பராமரிக்கப்படாமல் வீணாகும் நிலையில், புதிதாக அழகுபடுத்த வேண்டிய அவசியம் என்ன?.

முழுக்க முழுக்க தனியார் விளம்பர நிறுவனங்களுக்கு ஆதரவாக மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டு, சாலை மையத் தடுப்புகள் அகற்றப்படுகின்றன. இதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றனர்.

பணிகளை நிறுத்த உத்தரவு: இதுகுறித்து மாநகராட்சி ஆணையர் வீர் பிரதாப் சிங் கூறுகையில், தனியார் நிதியில், தனியாரால் சாலை மையத் தடுப்புகள் புதிதாகக் கட்டப்பட்டு அழகுபடுத்தப்பட உள்ளது என்றார்.

இதுகுறித்து மேயர் மு. அன்பழகன் கூறுகையில், எனக்குத் தெரியாமலேயே இந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மக்களின் வரிப்பணத்தை வீணாக்கும் இந்தப் பணிகளை உடனடியாக நிறுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்றார்.

குடிநீருடன் சாக்கடை நீர் கலப்பு: நகராட்சி அலுவலகம் முற்றுகை

மணப்பாறை, ஆக. 27: மணப்பாறை நகராட்சி பகுதியில் விநியோகம் செய்த காவிரி குடிநீரில் சாக்கடை நீர் கலந்து வந்ததை கண்டித்து வியாழக்கிழமை பொதுமக்கள் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

மணப்பாறை நகராட்சி 20-ஆவது வார்டுக்குள்பட்ட பகுதியிலுள்ள கரிக்கான்குளம் தெரு - அய்யலு தெரு சந்திப்பில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியின்போது பொதுமக்களுக்கான காவிரி குடிநீர் விநியோகிக்கும் குழாய் சீரமைக்கப்படாமல், சாக்கடைக்கு கீழ் பகுதியில் இருக்கும் வகையில் அமைந்துவிட்டதாம். இதனால் குடிநீர் குழாய் இணைப்பு பகுதியில் சாக்கடை நீர் புகுந்துவிடுவதாக கூறப்படுகிறது.

வழக்கம்போல் வியாழக்கிழமை மாலை காவிரி குடிநீரில் சாக்கடை நீர் கலந்து வந்துள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதியினர் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அங்கு வந்த நகராட்சி அதிகாரிகள், சுகாதாரமான குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததையடுத்து பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

அடையாள சுவாதீன அறிவிப்பு

ICICI Bank

கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட்., 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஒசூர் முதன்மைச் சாலை, பெங்களூரு - 560068.

இப்படிம், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர், ICICI வங்கி லிட்-இன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை (அமலாக்க) விதிகளில் விதி 3-இன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாள்களுக்குள் அதில் காணும் கடன் பாக்கியை செலுத்துமாறு கோரினார்.

ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்களுக்கும், பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழ்க்காணும் தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது அடையாள சுவாதீனத்தில் (Symbolic Possession) எடுத்துக் கொண்டுள்ளார். குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழ்வரும் அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ICICI வங்கி லிமிடெட்-க்குச் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிக்குக் கட்டுப்பட்டதாகும்.

வ. எண்.	கடன்தாரர் பெயர் / கடன் கணக்கு எண்	சொத்து விவரம் / அடையாள சுவாதீன தேதி	கோரிக்கை அறிவிப்புத் தேதி & கோரிக்கை அறிவிப்பின் படி தொகை (ரூ.)	கிளையின் பெயர்
1.	ஹிலியா சூப்பர்ஸ்பர் அண்டு இன்ஃபிராஸ் பிரைவேட் லிமிடெட், லதா ஆனந்த் மற்றும் ராஜேந்திரன், பிரதிநிதித்துவப் படுத்தும் இயக்குநர்கள்: ராஜேந்திரன், லதா ஆனந்த் மற்றும் P S வெங்கடேசன், எண் 1/183, செங்குன்றம் அருகில், டான்போஸ்கோ பள்ளி பின்புறம், ஸ்ரீ செல்வ விநாயகர் நகர், பாபசம்பாக்கம், பொன்னேரி, சென்னை - 600052 / 404205000585, 404251000001 & 404255000004	கீழே குறிப்பிட்டுள்ள சொத்துகள் அனைத்தும் மாநகர மேம்பாட்டுச் சென்னை மாநகராட்சி மேம்பாட்டு அரசாணை 16.06.1991 நாளிட்ட MS எண் 979-இன் கீழான தமிழ்நாடு அரசின் பதிவேட்டின்படி, இந்த நில மண்டலத்தின் அமைவிடம் - சர்வே எண்கள் 74, 76 - 83, வயோன்கிராண்ட் கிராமம் மற்றும் சர்வே எண்கள் 47, 48, 50 - 58, 71 - 74, 77 - 90, பாபசம்பாக்கம் கிராமம், சென்னை அண்ணா மாவட்டம். இது வேளாண் பயன்பாட்டுக்கான மண்டலத்திலிருந்து பொதுவான தொழில் பயன்பாட்டு மண்டலத்துக்கு மாற்றப்பட்டது. சொத்தின் அட்டவணை:- இனம்-1: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம், இதன் சர்வே எண் 70/1A, பரப்பளவு - 1.00 ஏக்கர். எல்லைகள்:- வடக்கு:- சர்வே எண் 73/2A, தெற்கு: சர்வே எண்கள் 76 & 69, கிழக்கு: சர்வே எண் 70/1B, மேற்கு: சர்வே எண் 75, இது வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இனம்-2: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இதன் சர்வே எண் 75/1, பரப்பளவு - 1.58 ஏக்கர், பட்டா எண் 194. இந்தப் பட்டா திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், மாதவரம் மண்டலத்தின் மண்டலத் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்டது. எல்லைகள்:- வடக்கு: சர்வே எண்கள் 78 & 74, தெற்கு: சர்வே எண் 76, கிழக்கு: சர்வே எண் 75/2, மேற்கு: சர்வே எண் 77. இது வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இனம்-3: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இதன் சர்வே எண் 75/2, பரப்பளவு 0.50 சென்ட். எல்லைகள்:- வடக்கு: சர்வே எண் 74, தெற்கு: சர்வே எண் 76, கிழக்கு: சர்வே எண் 75/3, மேற்கு: சர்வே எண் 75/1. இது வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இனம்-4: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இதன் சர்வே எண் 75/3, பரப்பளவு 1.48 ஏக்கர். எல்லைகள்:- வடக்கு: சர்வே எண் 74, தெற்கு: சர்வே எண் 76, கிழக்கு: சர்வே எண் 70, மேற்கு: சர்வே எண் 75/2. இது வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இனம்-5: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இதன் சர்வே எண் 57/1A, பரப்பளவு 1.30 ஏக்கர், பட்டா எண் 194. இந்தப் பட்டா திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், மாதவரம் மண்டலத்தின் மண்டலத் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்டது. எல்லைகள்:- வடக்கு: சர்வே எண்கள் 56 & 57/2, தெற்கு: சர்வே எண்கள் 73 & 74, கிழக்கு: சர்வே எண் 57/1B, மேற்கு: சர்வே எண்கள் 79 & 82. இது வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இனம்-6: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இதன் பழைய சர்வே எண் 57/2 (பாகம்), RS எண் 57/2B, பரப்பளவு 36 சென்ட், பட்டா எண் 194. இந்தப் பட்டா திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், மாதவரம் மண்டலத்தின் மண்டலத் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்டது. எல்லைகள்:- வடக்கு: சர்வே எண்கள் 55 & 56, தெற்கு: சர்வே எண் 57/1A, கிழக்கு: சர்வே எண் 57/2 (பாகம்), மேற்கு: சர்வே எண் 57/1A இது வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இனம்-7: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், முன்பு சைதாப்பேட்டை வட்டம், செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம், தற்பொழுது அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இதன் சர்வே எண் 78/2, பரப்பளவு 89 சென்ட் மற்றும் சர்வே எண் 78/1, பரப்பளவு 90 சென்ட் என மொத்தப் பரப்பளவு 1.79 ஏக்கர். சர்வே எண் 78/2-இல் உள்ள பரப்பளவு 89 சென்ட்டின் எல்லைகள்:- வடக்கு: சர்வே எண் 78/1, தெற்கு: சர்வே எண் 75, கிழக்கு: சர்வே எண் 74, மேற்கு: சர்வே எண் 77. சர்வே எண் 78/1-இல் உள்ள பரப்பளவு 90 சென்ட்டின் எல்லைகள்:- வடக்கு: சர்வே எண்கள் 79 & 80, தெற்கு: சர்வே எண் 78/2, கிழக்கு: சர்வே எண் 74, மேற்கு: சர்வே எண் 77. இது வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இனம்-8: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், முன்பு சைதாப்பேட்டை வட்டம், செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம், தற்பொழுது அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இதன் பழைய சர்வே எண் 74/1, புதிய சர்வே எண் 74/1A, பரப்பளவு 49 சென்ட். எல்லைகள்:- வடக்கு: சர்வே எண் 79, தெற்கு: சர்வே எண் 75, கிழக்கு: சர்வே எண்கள் 74/2 மற்றும் 74/2B, மேற்கு: சர்வே எண் 78. இனம்-9: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வேளாண் பயன்பாட்டுக்கு அல்லாத நிலம். அமைவிடம் - எண் 17, பாபசம்பாக்கம் கிராமம், முன்பு சைதாப்பேட்டை வட்டம், செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம், தற்பொழுது அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இதன் சர்வே எண் 74/1D, பரப்பளவு 56 சென்ட், பழைய சர்வே எண் 74, புதிய சர்வே எண் 74/1C, பரப்பளவு 30 சென்ட், சர்வே எண் 74/2, பரப்பளவு 35 சென்ட், சர்வே எண் 74/1B, பரப்பளவு 36 சென்ட். மொத்தப் பரப்பளவு 1.57 ஏக்கர். சர்வே எண் 74/1D-இல் உள்ள பரப்பளவு 56 சென்ட்டின் எல்லைகள்:- வடக்கு: சர்வே எண் 57, தெற்கு: சர்வே எண்கள் 74/1B, 74/1C, 73, கிழக்கு: சர்வே எண் 73/1, மேற்கு: சர்வே எண் 74/2. பழைய சர்வே எண் 74, புதிய சர்வே எண் 74/1C-இல் உள்ள பரப்பளவு 30 சென்ட்டின் எல்லைகள்:- வடக்கு: சர்வே எண் 74/1D, தெற்கு: சர்வே எண் 75, கிழக்கு: சர்வே எண் 73, மேற்கு: சர்வே எண் 74/1B. சர்வே எண் 74/2-இல் உள்ள பரப்பளவு 35 சென்ட்டின் எல்லைகள்:- வடக்கு: சர்வே எண்கள் 57 & 79, தெற்கு: சர்வே எண்கள் 74/1B, கிழக்கு: சர்வே எண் 74/1D, மேற்கு: சர்வே எண் 74/1A. சர்வே எண் 74/1B-இல் உள்ள பரப்பளவு 36 சென்ட்டின் எல்லைகள்:- வடக்கு: சர்வே எண்கள் 74/1D மற்றும் 74/2, தெற்கு: சர்வே எண் 75, கிழக்கு: சர்வே எண் 74/1C, மேற்கு: சர்வே எண் 74/1A. இது வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. அடையாள சுவாதீன நாள்: 24.08.2026	30.05.2026 ரூ. 7,19,78,052.52/-	சென்னை & திருச்சி

எனவே, முக்கியமாக கடன்தாரர்(களுக்கும்) / ஜாமீன்தாரர்(களுக்கும்) மேற்படி கடன் பாக்கியை செலுத்துமாறு 30 நாள் அறிவிப்பு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. செலுத்தத் தவறினால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8 & 9-ன் கீழும் வரும் ஷரத்துகள்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாள்கள் முடிந்த பின் மேற்படி அடமான சொத்துக்கள் விற்கப்படும்.

தேதி: 28.08.2026, இடம்: சென்னை & திருச்சி

உண்மையுடன் அதிகாரப்பூர்வ அலுவலர், ICICI வங்கி லிட்-க்காக

HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்.

HDB FINANCIAL SERVICES

பதிவு அலுவலகம் : ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் - 09. மண்டல அலுவலகம்: தரை தளம், ஜெனித் ஹவுஸ், கேசவ்ராவ் காத்யே மார்க், ரேஸ் கோர்ஸ் எதிரில், மகாலட்சுமி, மும்பை- 34. தொலைபேசி: 022-39586300.
அதிகாரபூர்வ அலுவலர்: M/s.HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்.,
எண்.36/71, முதல் தளம், சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி, தமிழ்நாடு-620 003

ஏல விற்பனை அறிவிப்பு டெண்டருடன் E-ஏலம்

(கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர்/ பொதுமக்களுக்கு) SARFAESI சட்டம்-2002, விதி 8(6) R/w விதி 9(1)-ன் கீழ்

கீழே கையொப்பமிட்டுள்ளவரான **HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்** -ன் அதிகாரபூர்வ அலுவலர் அவர்கள், இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்கில் கடனுக்கு ஈடாக உள்ள சொத்துகளை **'உள்ள இடத்தில் உள்ளவாறு' & 'உள்ளது உள்ளவாறு'** எனும் அடிப்படையில் விற்கும் உரிமையுடன் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் தமது சுவாதீனத்தில் (Possession) எடுத்துக்கொண்டார்.

விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் & முகவரி: 1) கார்த்திகேயன் கூட்ஸ் கேரியர், எண். 48C 22, நகரம் சாலை, VOC நகர், பட்டுக்கோட்டை-614 601. **2) கார்த்திகேயன் M,** 48/C 22, VOC நகர், நகரம் சாலை, பட்டுக்கோட்டை-614601. **3) சங்கீதா G,** எண். 48C 22, நகரம் சாலை, VOC நகர், பட்டுக்கோட்டை-614601 **2. கணக்கு எண்:3145049. 3.மொத்த நிலுவைத் தொகை: கடன் கணக்கு எண் 3145049-க்கு ரூ.16,95,201.45 (ரூபாய் பதினாறு லட்சத்து தொண்ணூற்றைந்தாயிரத்து இருநூற்று ஒன்று மற்றும் நாற்பத்தைந்து பைசா மட்டும்)** 21 ஆகஸ்ட் 2026 அன்றுள்ளபடி, மற்றும் அது முழுமையாகச் செலுத்தப்படும் வரை கணக்கிடப்படும் வட்டி/ தற்செயலான செலவுகளுடன். **கடன் வழங்கிய நிறுவனத்திற்கு தெரிந்தவரையில் வில்லங்கம்-NIL**
அசையா சொத்துக்களின் விவரங்கள்: சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், அமைவிடம் தஞ்சாவூர் வருவாய் மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், பட்டுக்கோட்டை பதிவாளர் அலுவலகம், பட்டுக்கோட்டை நகர், 78, மகாராஜா சமுத்திரம் கிராமம், எண். 01, இணை துணைப் பதிவு மாவட்டம், பெருமாள் கோவில் தெரு, R.S.எண்.160, 2178 சதுர அடி பரப்பளவு எல்லைகள் வடக்கு: கிழக்கு - மேற்கு பொது சாலை, தெற்கு: கிழக்கு மேற்கு பொது சாலை, கிழக்கு:ஆறு, மேற்கு: பவர் ஏஜெண்ட் சந்திரசேகர் மனை .

ரிசர்வ் விலை	EMD தொகை	ஏல உயர்வு தொகை	ஏல தேதி மற்றும் நேரம்	EMD செலுத்த கடைசி தேதி & நேரம்
ரூ. 95,48,750./-	ரூ. 9,54,875/-	ரூ.1,00,000/-	29.09.2026 @ காலை 11.00 மணி முதல் பகல் 12:00 மணி வரை.(தலா 5 நிமிடங்கள் வீதம் வரம்பற்ற நீட்டிப்புடன்)	28.09.2026 மாலை 05:00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. ஏல விற்பனையானது **'இணைய வழி e-ஏல'** முறையில் **https://bankeauctions.com** இணையத்தளத்தில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள்களில் எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடக் கால நீட்டிப்பு வசதியுடன் நடைபெறும். **2.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் **https://bankeauctions.com** இணையத் தளத்தில் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி டேவணித்தொகையைச் செலுத்தலாம் **https://bankeauctions.com** இணையத்தளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையைக் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% எனும் அளவில் **"HDB Financial Service Limited"** எனும் பெயரிலான செலுத்தாணை (Order) / கேட்பு வரைவோலை (DD) வடிவில் செலுத்த வேண்டும். இணையத் தளத்தில் தன்னைப் பதிவு (ஒருமுறை) செய்து கொண்ட பின்பு ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் ஏல ஆவணத்தைத் தாக்கல் செய்தவற்கான கடைசி நாளுக்கும் நேரத்துக்கும் முன்னதாகப் பின்வரும் ஆவண நகல்களை இணையத் தளத்தில் பதிவேற்ற வேண்டும். அவையாவன: i) NEFT/RTGS செலுத்துச்சீட்டு நகல் அல்லது கேட்பு வரைவோலை` , ii) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல், iii) அடையாளச் சான்று / முகவரிச் சான்று [வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் (KYC) எனும் வகையில்] அஃதாவது சுயசான்றொப்பம் செய்யப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல் / ஓட்டுநர் உரிம நகல் / கடவுச்சீட்டு நகல். இவை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். இவை தவிர, பின்னிணைப்பு-II & III ஆகியவற்றின் (இவற்றை **https://bankeauctions.com** இணையத் தளத்தில் தரவிறக்கிக் கொள்ளலாம்) ஒளிவருடல் நகல்களை (scanned copies) முறையாக நிரப்பிக் கையொப்பமிட்டுப் பதிவேற்றுவதும்கூட அவசியமாகும். பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றுதல், ஏலப்புள்ளி ஆவணங்களைத் தாக்கல் செய்தல் போன்றவற்றுக்கு உதவி தேவைப்படுகிற மற்றும் இணைய வழி உள் ஏலக்கோரலுக்கான பயிற்சி / செய்முறை விளக்கம் தேவைப்படுகிற ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **C1 INDIA PRIVATE LIMITED, ப்ளாட் எண். 68, 3 வது தளம், செக்டார் - 44, குர்கான், ஹரியாணா - 122 003 மின்னஞ்சல் - support@bankeauctions.com, தொடர்பு நபர் பெயர்/ மின்னஞ்சல் முகவரி & தொடர்பு எண்: 1.தரணி கிருஷ்ணா / andhra@c1india.com, தொலைப்பேசி:9948182222, 3.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலத்துக்கு நேரிடையாக வந்து தாங்களே தனிப்பட்ட முறையில் கலந்து கொள்வதோடு தாங்கள் தங்களுக்காகத்தான் ஏலத்தில் கலந்து கொள்வதாக எழுத்துப்பூர்வமாக பிரகடன அறிக்கை (declaration) தர வேண்டும். தன்/ அவர் சார்பாக அதிகாரப்பூர்வ நபரை அனுப்பி வைப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. **4.**ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தைப் பெற அணுக வேண்டியவர்: மேலாளர் : **M/s. HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்., 36/71, சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி -620003, தமிழ்நாடு.** **5.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தை மட்டும் நிரப்பி உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு **அதிகாரப்பூர்வ அலுவலர், HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** என முகவரியிட்டு குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையை **"HDB Financial Service Limited"** என்ற பெயரில் எடுக்கப்பட்ட செலுத்து ஆணை (PO) / கேட்பு வரைவோலை (DD) இணைத்து **28.09.2026 அன்று மாலை 05.00 மணிக்கோ** அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்க வேண்டும். **6.** சொத்து ஆய்வு மற்றும் இதர விவரங்களுக்கு ஆர்வமுள்ள ஏலதாரர் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: **M/s. HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்., 36/71, சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி -620003 , அதிகாரப்பூர்வ அலுவலர்: J.கவிப்ரியா - 7904382718, திரு.ரஞ்சித் -9952535434. 7.** சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி"** எனும் நிபந்தனைகள் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **8.** இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்கான, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் **29.09.2026 அன்று முற்பகல் 11:00 மணிக்குத்** திறக்கப்படும். பொதுவாக ஏலமானது மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக நடைபெறும் என்றாலும்கூட, மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகையை விடக் கூடுதலாக ஏலம் கோர விரும்பும் ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கிடையே அதிகாரப்பூர்வ அலுவலர் தனது விருப்புரிமையின் பேரில் வெளிப்படையான ஏலத்தை நடத்தக்கூடும். அப்படி நடந்தால் அந்த நேரத்தில் உச்சபட்சத் தொகைக்கு ஏலம் கோருபவருக்கே விற்பனை முடிவு செய்யப்பெறும். எப்படி இருந்தாலும் விற்பனையானது **HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெடின்** உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. **9.** வெற்றி பெறும் ஏலதாரர் விற்பனைத் தொகையில் 25%-ஐ (டேவணித்தொகை உட்பட) விற்பனை முடிந்த உடன் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு முன்னதாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 15 நாள்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறினால் முதலில் செலுத்தப்பட்ட 25% தொகை பறிமுதல் செய்யப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இது திருப்பித் தரப்படமாட்டாது. ஒருவேளை வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே குறிப்பிட்டபடி மொத்த விற்பனைத் தொகையின் 25%-ஐச் செலுத்தத் தவறினால், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு விற்பனையை உறுதி செய்ய முடிவெடுக்கப்படும். **10.** இங்கே குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் விற்பனை விலை முழுமையாகப் பெறப்பட்ட பின்னரே விற்பனைச் சான்றிதழானது வெற்றி பெற்ற வாங்குநரின் பெயரில் அதிகாரப்பூர்வ அலுவலரால் வழங்கப்படும். **11.** பெயர் மாற்றத்துக்காகச் சட்டப்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் முதலான கட்டணங்கள் வெற்றி பெறும் வாங்குநரையே சாரும். **12.** சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைகளான (சட்டப்படியான வீட்டு வரி, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) வருமான வரி பிடித்தம் (TDS), சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஏதேனும் அரசுக்கு, அரசின் கீழான அமைப்புகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டியிருந்தால் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரரே செலுத்த வேண்டும். **13.** எந்தக் காரணமும் சொல்லாமல், ஏலப்புள்ளியையோ ஒப்பந்தப்புள்ளியையோ எந்த ஒரு விலைகோரலையுமோ அனைத்து விலைகோரல்களையுமோ ஏற்க அல்லது தள்ளுபடி செய்ய அல்லது ஏலத்தைத் தள்ளி வைக்க / ஒத்தி வைக்க / ரத்துச் செய்யவும் , எந்தக் காரணமும் சொல்லாமல் விற்பனையின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மாற்றவும் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

தேதி : 26.08.2026, இடம் : திருச்சி **ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்**